# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2472- 2026 ජනවාරි මස 16 වැනි සිකුරාදා - 2026.01.16

2472ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தயோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 16 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 17 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2026,பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, சனவரி மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

15 - B 82655 - 403 (2026/01)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இலங்கை மகாவலி அதிகார சபை

இணைப்பு 09

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டமூலத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்.

வட மத்திய மாகாண சபையின் பொலன்னறுவை மாவட்டத்தின் திம்புலாகல பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பிரதிக் காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கிடையிலான) பி. ஜி. நொயல் ஜெயசிரி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியவர்களால் 2004.10.08 ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ள இலக்கம் පො/බි/වි/පු/1052 (වාරි) ஐ உடைய கொடைப்பத்திரத்தின் உரமையாளரான அரலகங்வில, தெவகம யாயா 05 இலக்கம் 138 இல் வசிக்கும் விதானகமகை லிலாவதி என்பவருக்குக் கையளிக்கப்பட்டு மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 6/6/118 இன் கீழ் 2004.12,23 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழேயுள்ள அட்டவணை யில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு விரும்பாததால் பின்னுரிமைத் தன்மைக்கு எவருமில்லையெனப் பதிவாகியிருப்பதால் அவ் வழங்கல் பத்திரத்தைக் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக இத்தால் அறியத்தருகின்றேன்.இது தொடர்பில் ஏதேனும் எதிர்ப்புகள் காணப்பட்டால் அது 2026.02.06 ஆந் திகதிக்கு முன் எழுத்து மூலம் எனக்கு தெரிவிக்க வேண்டும்.

அட்டவணை

பொலன்னறுவை நிர்வாக மாவட்டத்தின் திம்புலாகல பிரதேச செயலாளர் பிரிவின்.......... பற்றுவையின்/ கோரளையின் 248 தெவகல கிராம அலுவலர் பிரிவின் தெவகல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் .................... இடம் உள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் மூலம் திரட்டப்பட்ட இலக்கம் இ.வே.இ.போ. 169 இ 01 உடைய திடல் பத்திரத்தில் ............ இனால் தயாரிக்கப்பட்ட இலக்கம் .............. ஐ உடைய வரை படத்தின் இலக்கம் 07 ஐ உடைய காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும் விஸ்தீரணத்தில் ஹெக்டயார்/ 1.277 ஏக்கர் 00றூ.00பே. அளவுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டதுமான அரச காணி.

வடக்கு : கா.இ. 06;
கிழக்கு : கா.இ. 03;
தெற்கு : கா.இ. 08;
மேற்கு : கா.இ. 04.

பி. ஜி. நொயல் ஜெயசிரி ,
பிரதேச செயலாளர்,
பிரதிக் காணி ஆணையாளர்,
( மாகாணங்களுக்கிடையிலான).

இலங்கை மகவலிஅதிகார சபையின் பி வலயம்,
வெலிகந்த,
2025.11.26.

01-200

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/78017
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: EP/28/LB/L7/LS/BAT/ KPS/ 20.

21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 209 D, குடும்பிமலை கிராம அலுவலர் பிரிவின் குடும்பிமலை கிராமத்தில் கடத்திரள் வரைபட இலக்கம் 270052 , வலய இலக்கம் 25 இல் 12 ஆம் வலயத்தின் பத்திர இலக்கம் 01 இன் வரைபடத்தில் துண்டு இலக்கம் 265 இனால் காண்பிக்கப்பட்டுள்ள 0.7186 ஹெக்டயார் பரப்பளவைக் கொண்ட அரசாங்கக் காணியை சமய நடவடிக்கைகளுக்காக Sri Kenkeshwara Pillaiyar Temple Trust Board எனும் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது.

வடக்கு: துண்டு இலக்கம் 264 மற்றும் 220;
கிழக்கு: துண்டு இலக்கம் 220;
தெற்கு: துண்டு இலக்கம் 272;
மேற்கு: துண்டு இலக்கம் 270.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.09.26ஆந் திகதி முதல் முன்னோக்கி);

வருடாந்தக் குத்தகைத் தொகை: தலைமை மதிப்பீட் டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டின் மேம்படுத்தப்படாத பெறுமதியின் 1/2 % ஆகும்.

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் குத்தகை ஆரம்பித்து (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியை சமய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைக்காரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப்பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2025.09.26 ஆந் திகதி முதல் ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு குத்தகையைச் செலுத்துவதற்குத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ்.வீ.ஏ.டி.இஷாரா எம்.சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 1200/6,
''மிஹிகத்த மெதுர'',
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2026.01.02.

01- 172